DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.  43/2025 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Father’s /Husband Name | : | நாகராஜ் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 55 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day June 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025 ம் தேதி நன்னிலம் காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த போது திருவாரூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த கண்ணன் என்பவரை விசாரித்து நிலையம் வந்து நிலைய மனு எண். 14/2025 என கொடுத்து 13.01.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு நன்னிலம் காவல்நிலைய குற்ற எண். 11/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS – ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கையையும் வழக்கின் புகாரையும் விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் புகார் பெற்று 6 நாட்களுக்குப்பிறகு முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டதென்றால் சரிதான். மனு ரசீது பதிவு செய்த பின்னர் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டதால் தாமதம் ஏற்பட்டது. புகாரில் சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்களா என்றால்

கூறியுள்ளார்கள். நான் தவறான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் புகார்தாரரின் கைரேகை பெறப்பட்டது பற்றிய விளக்கம் என்னவென்றால் புகார்தாரர் புகாரளிக்கும்போது கட்டுப்போட்டிருந்ததால் அவரால் கையொப்பம் செய்யவில்லை. கைரேகையின் கீழ் புகார்தாரரின் பெயர் எழுதவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 ன் காயத்திற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
DN: cn=M S
BHARATHIDHASAN,
ou=TIRUVARUR,
o=TAMIL NADU
STATE JUDICIAL
SERVICE,
st=Tamilnadu, c=IN
Date: 2025.07.21
01:02:56 +0530